**Publication:** Dina Boomi
**Date:** 25/08/2013
**Edition:** Coimbatore
**Page No.:** 3
**Headline:** Winners of TCS IT Wiz

# டிசிஎஸ் ஐடி விஸ் போட்டியில் ஜிகே.டி பள்ளி வெற்றி: 2வது இடத்தை கோத்தகிரி சென் ஜூட் பப்ளிக் பள்ளி பிடித்தது

கோவை ஆக 25

கோவை குனியமுத்தூர் ஸ்ரீ கிருஷ்ணா கல்லூரியில் நடைபெற்ற டிசிஎஸ் ஐடி விஸ் போட்டிகளில் கோவை பல்வேறு பள்ளிகளைச் சேர்ந்த 700க்கும் மேற்பட்ட மாணவர்கள் பங்கேற்றனர். பள்ளிகளுக்கு இடையிலான இந்தியாவின் மிகப்பெரிய ஐடி வினாடி வினா போட்டியான டிசிஎஸ் ஐடி விஸ் போட்டிகளை முன்னணி தகவல் தொழில்நுட்ப சேவைகள், ஆலோசனை மற்றும் வர்த்தக தீர்வுகள் நிறுவனமான டாடா கன்சல்டன்சி சர்வீசஸ் (டிசிஎஸ்) ஏற்பாடு செய்திருந்தது.

கோவையில் நடைபெற்ற பரபரப்பு மிகுந்த பிராந்திய இறுதிச்சுற்றில் ஜிகேடி பள்ளியைச் சேர்ந்த நவீன் கிருஷ்ணன், மற்றும் ராகுல் முதலிடம் பெற்றனர். செண்ட் ஜூட்ஸ் பப்ளிக் பள்ளி கோத்தகிரி பள்ளியைச் சேர்ந்த அனுஷியா பிரபா, ஜியோன் பிலோமின் ஆண்டனி ஆகியோர் 2வது இடம் பெற்றனர். வெற்றி பெற்றவர்களுக்கு தலா ஒரு ஐபேட் மற்றும் 2ம் இடம் பெற்றவர்களுக்கு தலா ஒரு கேலக்ஸி டேப்லெட் பரிசாக அளிக்கப்பட்டது. வெற்றி பெற்றவர்கள் 'ஸ்மார்ட் டெக் விசார்ட் 2013' பட்டத்திற்கான மெகா இறுதிச் சுற்றில் கோயம்புத்தூர் சார்பில் கலந்து கொள்வார்கள்.

வெற்றி பெற்றவர்களுக்கு சென்னை செயல்பாடுகளின் தலைவர் மற்றும் குரோத் மார்க்கெட்ஸ் தலைவர் ரவி விஸ்வநாதன் பரிசுகளை வழங்கினார். இந்தப் போட்டியின் போது மாணவர்களுடன் உடனுக்குடனான தொடர்பை ஏற்படுத்திக் கொள்ளும் வகையில் டுவிட்டர் போட்டி நடத்தப்பட்டது. பிராந்திய இறுதிச் சுற்றுக்களின் போது 477 ட்வீட்கள் பதிவு செய்யப்பட்டன.

இந்த ஆண்டு டிசிஎஸ் ஐடி விஸ் மூலம் ஸ்மார்ட் டெக் விசார்ட்-கான தேடல் நாடு முழுவதும் அகமதாபாத்,பெங்களூர், புவனேஸ்வர், சென்னை, கோவை, தில்லி, ஐதராபாத், இந்தூர், கொச்சி, கொல்கத்தா, லக்னோ, மும்பை, நாக்புர், மற்றும் புனே ஆகிய 14 நகரங்களில் நடத்தப்படுகிறது. யுஏஇ-யில் நடைபெற்ற போட்டிகளில் வெற்றி பெற்றவர்களும் மெகா இறுதிப் போட்டியில் பங்கேற்பார்கள்.

முதல் கட்டமாக எழுத்து தேர்வில் அனைத்து குழுக்களுக்கும் 20 கேள்விகள் கேட்கப்பட்டன. எழுத்து தேர்வில் முதல் ஆறு இடங்களைப் பிடித்த அணிகள் பிராந்திய இறுதிச் சுற்றுக்கு தகுதி பெற்றன. அனிமேஷன் அடிப்படையில் க்விஸ் மாஸ்;டர் பிக்ப்ரெய்ன் மற்றும் குழுவினர் உருவாக்கியிருந்த க்விஸ் ஷோ ன் பொருள் பிராந்திய அளவிலான இறுதிச் சுற்றின் சிறப்பம்சமாகும். சுற்றுக்கள் வருமாறு பேட்டா கிலவுட்ஸ், பிக் டேட்டா, விஷூ வலைசேஷன், ஐஒடி- இன்டர்நெட் ஆடிப் திங்ஸ்பின் டிரஸ்ட் மற்றும் ;;டிசிஎஸ். இறுதிச் சுற்றுக்கு முன்னேறிய ஆறு அணிகளுக்கும் டபுள் டபுள் ஜிம் பேக், ஹெட்டிபோன்கள், யுஎஸ்பி பென் டிரைவர்கள், நோட்புக் ஸ்பீக்கர்கள் மற்றும் டிசர்ட்களை டிசிஎஸ் பரிசாக அளித்தது.